

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், படியூர் ஊராட்சி, படியூரில் கட்டப்பட்டுள்ள புதிய கிராம நிர்வாக அலுவலகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். உடன் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்வழி, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, ஊராட்சி மன்றத்தலைவர் ஜீவிதா சண்முகசுந்தரம் உள்பட பலர் உள்ளனர்.

## தொண்டர்கள் புடைசூழ

# அரசு மரியாதையுடன் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் தகனம்!

*சென்னை, டிச.17-*

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதியின் எம்.எல்.ஏ.வுமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு (வயது 76) கடந்த மாதம் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து அவர் சென்னை மணப்பாக்கத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவருக்குத் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் அவர் சிகிச்சை பலனின்றி 14.12.2024 அன்று காலை 10.12 மணியளவில் மறைவெய்தினார். இவரது மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் தங்களது இரங்கல்களைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து சென்னையில் நேற்று மாலை அவரது உடலுக்கு இறுதிச்சடங்குகள் நடைபெற்றன. இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்



பினர்கள் ஜோதிமணி, வசந்தகுமார் உள்ளிட்ட பலரும், கட்சி தொண்டர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் தி.மு.க. அமைச்சர்கள் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி தலைவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் மணப்பாக்கம் இல்லத்தில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் முகலிவாக்கம் மின் மயானத்தில் வைக்கப்பட்டு, போலீசார் மூன்று முறை வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு 48 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து இரங்கல் கூட்டம் நடத்தப்பட்ட பின் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் தகனம் செய்யப்பட்டது.

## பா.ஜ.க.வை எதற்குமே கண்டிக்காமல்

# வாய்ச்சவடால் விட்டுக்கொண்டிருக்கிறார் பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

*சென்னை, டிச.17-*

“பா.ஜ.க.வை எதற்குமே கண்டிக்காமல் வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி” என்று சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல ‘வாழைப்பழ காமெடியை’ போல அறிக்கையிலும் சரி மேடையிலும் சரி சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார் எதிர்கட்சித்தலைவர் பழனிசாமி! திமுக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சமத்துவ-சமூக மேம்பாட்டு செயல்திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சருக்கான சிம்மாசனத்தை அளித்திருக்கிறார்கள். குரலை உயர்த்தி கைகளைச் சுழற்றி பேசினால் மக்களை ஏய்த்து, திமுகவை வீழ்த்திவிடலாம் என்று பகல் கனவு கண்டு



கொண்டிருக்கிறார் பழனிசாமி! ஆட்சிக்காகவும் அதிகாரத்திற்காகவும் சசிகலா தொடங்கி, ஓபிஎஸ் வரை ஒவ்வொருவராக காலை வாரிவிட்ட நீண்ட துரோக வரலாறு உங்களுடையது! ஆட்சிக்காக பாஜகவிடம் அண்டிப் பிழைத்து மாநிலத்தின் உரிமைகளை எல்லாம் அடகு வைத்துவிட்டு இப்பொழுதும் கூட பாஜகவை எதற்குமே கண்டிக்காமல் ‘வலிக்காமல் வலியுறுத்திவிட்டு’ மேடையில் வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கும் மிஸ்டர் கோட்டைச்சாமியை யாராவது எழுப்பிவிடுங்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## துணை முதல்வர் பிறந்தநாள் விழா! வல்லம் மத்திய ஒன்றியம் - நாட்டார் மங்கலத்தில்

# மாவட்ட தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுனர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் வழங்கினார்!

*செஞ்சி டிச 17-*

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகஅமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் வல்லம் மத்திய ஒன்றியம் நாட்டார்மங்கலம் ஊராட்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புயல் மழையால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் தமிழரசன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாட்டார்மங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் மாணிக்கம் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் கலந்து கொண்டு நாட்டார் மங்கலம் ஊராட்சியில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் நல மக்களுக்குஅரிசி புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒலக்கூர் ஒன்றிய சேர்மன் சொக்கலிங்கம்,மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், ஒன்றிய அவைத் தலைவர் ஏழுமலை, துணை செயலாளர்கள் பாண்டியராஜன். கண்ணன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி நிர்வாகிகள் சௌந்திர பாண்டியன், கோவிந்தன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அன்பரசு, மாணிக்கம், கிருஷ்ணமூர்த்தி, தியாகு, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி தகவல் தொழில்நுட்ப அணி கிழக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம் தலைமையில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி கலந்துகொண்டு சேலம் மண்டலம் தகவல் தொழில்நுட்ப அணி கூட்டத்தில் நிர்வாகிகள் கலந்து கொள்வது குறித்தும், 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தகவல் தொழில்நுட்ப அணி பணிகளை குறித்தும்,ஆலோசனைகள் வழங்கி பேசினார். பென்னாகரம் தொகுதி பார்வையாளர் பாரி,ஒன்றிய செயலாளர் மடம் முருகேசன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஜெ.ராஜேஷ், உதயசூரியன், ஈஸ்வர், யாஸ்மின், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ரகு,முனியப்பன், கவின்குமார், காயத்ரி, மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒன்றிய,நகர,பேரூர் கழக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவரும் ஈரோடுகிழக்கு தொகுதி எம்.எல்.ஏவுமான மறைந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் திருவுடலுக்கு நாடாளுமன்ற மக்களவைக் கழக குழுத் தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அப்பொழுது பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் உடன் இருந்தனர்.

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# கோவை வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## மாநகர் மாவட்டக் கழகம் தீர்மானம் - மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

*கோவை, டிச.17-*

கோவைக்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், இளைஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் திராவிட இயக்கத்தின் இளந் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவை வருகையின்போது, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில், மகத்தான பிரம்மாண்ட மான வரவேற்பு அளிப்பது என கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் நடைபெற்ற மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா. பழனிச்சாமி,மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ,கல்பனா செந்தில்,கழக தீர்மானக் குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து,கழக சட்டத் துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி,தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ்,

தகவல் தொழில்நுட்ப தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மறை,மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி. கோகுல்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ். பி.கண்ணப்பன், ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ச.குப்புசாமி, தங்கம் சந்திரசேகர், சரஸ்வதி புஷ்பராஜ்,

பகுதிக் கழகச் செயலாளர்கள் ப.பசுபதி, மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், எஸ்.எம்.சாமி, மு.சிவா, ஷேக் அப்துல்லா, மா.நாகராஜ், இரா . சேரலாதன், அஞ்சுகம் பழனியப்பன், வ.ம.சண்முகசுந்தரம், எ.எம்.கிருஷ்ணராஜு, கே.எம்.ரவி, வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

திராவிடச் சூரியன், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு, மகளிர் உரிமைத் தொகை,நான் முதல்வன் திட்டம், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் உள்ளிட்ட பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் 19.12.2024 அன்று காலை 10.00 மணியளவில் கோவை விமான நிலையம் வருகை தருகிறார்.

அவருக்கு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் மகத்தான பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.



இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்பதென்று இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**துணை முதல்வர்**

**உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு!**

இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட இயக்கத்தின் வழித் தோன்றல், திராவிட சூரியன், ஒற்றை செங்கல் புரட்சியின் வெற்றி நாயகன், மக்கள் நலனை மனதில் என்றும் இதயத்தில் சுமந்திருப்பவர், நமது கழகம் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ள வரை தழைத்தோங்கி வளரும், உயரும், தமிழ்மக்களின் நலனுக்காக என்றும் உழைக்கும் எனும் நம்பிக்கை ஒளிக்கீற்றை கையில் ஏந்தி வரும் அயராத உழைப்பின் அடையாளம், மக்கள் நலனை என்றும் இதயத்தில் சுமந்திருக்கும், தி.மு.க கழகத்தின் தொண்டன், கழக இளைஞரணிச் செயலாளர், முரசொலி அறக்கட்டளைத் தலைவர், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என ஓங்கி உயர்ந்து கழகத்தின் காவல் அரணாக காட்சியளிக்கும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நாளை (18.12.2024 - புதன் கிழமை) மதியம் 1.00 மணியளவில்,சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தருகிறார்.

பீளமேடு ஹோப் காலேஜ் பகுதியில் மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, தெற்கு சட்டமன்றத் தொகுதி கழகத்தினர் சார்பில், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் மாபெரும் மகத்தான பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக்கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்பதென்று இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கழக கொள்கை மறவர் இரா.மோகன் மறைவிற்கு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கல்களை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் மறைவிற்கு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் அவரது குடும்பத்தி னருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினருக்கும் ஆழ்ந்த இரங்கலை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஓ.செ. விசுவநாதன்
### டிசம்பர் 17 (2011)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**சென்னைக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது, 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தீச்சட்டி ஊர்வலம் நடத்தினார்.**

**1968ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் பணிபுரிந்தபோது, தனது பகுதியில் தொ.மு.ச. கிளையினைத் துவக்கி, பின்னர் பெரியார் மாவட்ட த.நா.மின்வாரிய தொ.மு.ச. செயலாளராகப் பணியாற்றினார்.**

**அதன்பின்னர், பெருந்துறை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஈரோடு மாவட்ட துணைச் செயலாளராக தொடர்ந்து இருமுறையும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**